செ.வெ.எண் 727 நாள் 18-10-09

# அரசு செய்தி வெளியீடு – 18–10–2009

கோவை மாநகரில் தமிழக அரசு முன்னின்று நடத்தவுள்ள உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டினையொட்டி, தமிழகச் சட்டப் பேரவையிலே உள்ள கட்சிகளின் தலைவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அந்த மாநாட்டிலே பங்கேற்கக் கோரியும், அந்த மாநாட்டுக்கென அமைக்கப்பட வுள்ள பல்வேறு குழுக்களில் அந்தக் கட்சிகளின் சார்பில் யாரை பிரதிநிதிகளாக சேர்த்துக் கொள்வது என்பது பற்றியும் கேட்டு இன்று கடிதம் எழுதியிருக்கிறார்.

அந்தக் கடிதத்தின் விவரம் பின்வருமாறு :–

"தமிழக அரசு முன்னின்று நடத்தவிருக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24ஆம் நாள் முதல் 27ஆம் நாள் வரை கோவை மாநகரில் நடைபெறவுள்ளது. அந்த மாநாட்டிற்கு ஆய்வரங்கு மற்றும் ஆக்கப் பணிகளை நிறைவேற்றுவதற்கான பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட விருக்கின்றன. கட்சி வேறுபாடின்றி தமிழ் மொழி வளர்ச்சி மற்றும் அதன் ஆக்கம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு நடைபெறும் இந்த மாநாட்டிற்கு தங்களின் ஒத்துழைப்பைப் பெரிதும் விரும்புகிறேன். மாநாட்டில் தாங்கள் கலந்து கொள்ளுமாறு வேண்டுவதுடன், மாநாட்டுக்கென அமைக்கப்படவுள்ள பல்வேறு குழுக்களில் தங்கள் கட்சியின் சார்பாக தாங்களோ அல்லது தங்களது பிரதிநிதி ஒருவரோ இடம் பெற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்கான பெயரைத் தாங்கள் 25–10–2009 ஆம் தேதிக்குள் எழுதி அனுப்பிட வேண்டுகிறேன்."

வெ., ந., இ.,
இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-9